## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.2/2022

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜரத்தினம் | மதம் | : இந்து |
| த/பெ | : தர்மையன் | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : கே.ஜி. கண்டிகை |
| தொழில் | : -- | வட்டம் | : திருத்தணி |

**22.09.2025**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி நாராயணா தான் என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்பது தெரியுமா என்றால் தெரியும். நாராயணாவிடமிருந்து ரூ.50,000/-ஐ வெங்கடேசன் வாங்கியிருந்ததற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் நாராயணாவிற்கு உறவினர் என்றால் சரிதான். வெங்கடேசன் எனக்கு தம்பி ஆவார். நான் நாராயணனுக்கு தான் உறவு என்றாலும் வெங்கடேசனுக்கு உறவு இல்லை என்றாலும் சரியல்ல.

2. நான் சாட்சி கையெழுத்து போட்டது இந்த ஒரு கடனுறுதிச்சீட்டு மட்டும்தான் என்றால் வேறு ஒரு கடனுறுதிச்சீட்டிலும் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். அவ்வாறு எத்தனை கடனுறுதிச்சீட்டுகளில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் நான்கு கடனுறுதிச்சீட்டுகளில் கையெழுத்து செய்துள்ளேன். அந்த கடனுறுதிச்சீட்டுகளின் தேதி தெரியுமா என்றால் தெரியும். அது தொடர்பாக வழக்கு எதுவும் நடக்கிறதா என்றால் வழக்கு நடக்கிறது. அந்த விவரத்தை என்னிடம் நாராயணன் சொன்னார் என்றால் ஆமாம். தாவா கடனுறுதிச்சீட்டு எழுதும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நான், நாராயணன், வெங்கடேசன், பரந்தாமன் இருந்தோம். கடனுறுதிச்சீட்டை எங்கு வைத்து எழுதினோம் என்றால் நாராயணன் வீட்டில் வைத்து

எழுதினோம். பரந்தாமன் எழுதினார்.

3. பணம் ரூ.50,000ஐ நேரடியாக கொடுத்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அது என்ன தாள்கள் என்றால் அனைத்துமே ரூ.500/– தாள்கள்தான். அது எந்த வருடம் என்றால் 2019ம் வருடமாகும். நாங்கள் கடனுறுதிச்சீட்டு எழுதியது கையெழுத்து போட்டது அனைத்தும் ஒரே பேனா என்றால் இல்லை. நான் எந்த பேனாவில் கையெழுத்து செய்தேன் என்றால் நீல மையாகும். அது மைபேனாவா அல்லது பந்துமுனை பேனாவா என்றால் ஞாபகமில்லை. என் முன்பு வெங்கடேசலு கையெழுத்து செய்யவில்லை என்றால் எங்கள் முன்புதான் கையெழுத்து செய்தார். பிரதிவாதி உரம் வியாபாரம் செய்யவில்லை என்றாலும் அவரது மகன்தான் உரம் வியாபாரம் செய்கிறார் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிதான் செய்கிறார். கடனுறுதிச்சீட்டை நாராயணா வாங்கி வந்தார் என்றால் இல்லை. வெங்கடேசலுதான் வாங்கி வந்தார்.

4. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. என்ன தேவைக்காக பிரதிவாதி பணம் பெற்றார் என்றால் அவரது மகனை குவைத்திற்கு அனுப்புவதற்காக வாங்கினார். அவரது மகன் குவைத்துக்கு சென்றாரா என்றால் தெரியாது. அவரது மகன் குவைத்துக்கு சென்றாரா இல்லையா என்பதாவது தெரியுமா என்றால் தெரியாது. நான் கடனுறுதிச்சீட்டில் எத்தனையாவது சாட்சி என்றால் முதல் சாட்சி ஆவேன். மொத்தம் எத்தனை சாட்சிகள் என்றால் நானும் பரந்தாமனும் சாட்சிகள் ஆவோம். கடனுறுதிச்சீட்டு எந்த மொழியில் எழுதப்பட்டது என்றால் தெலுங்கில் எழுதப்பட்டது. எனக்கு தெலுங்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். 5ம் வகுப்பு வரை தெலுங்கு மொழியில் படித்தேன். 6ம் வகுப்பில் இருந்து தமிழ் மொழியில் படித்தேன்.

5. வா.சா.ஆ 1 கடனுறுதிச்சீட்டில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. குவைத்திற்கு செல்வதற்காக என நான் சொல்லியுள்ள விவரங்கள் கடனுறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அப்படி எழுதமாட்டார்கள். பணம் தேவை என்றுதான் வாங்குவார்கள். நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி பணமே வாங்கவில்லை என்றாலும் நானும் நாராயணனும் உறவினர் என்பதை வைத்து

பிரதிவாதியை ஏமாற்றுகிறோம் என்றாலும் பிரதிவாதியின் மகன் குவைத்திற்கு செல்லவே இல்லை என்றாலும் சரியல்ல. நானும் பரந்தாமன், நாராயணன் மூவரும் சேர்ந்து 4 கடனுறுதிச்சீட்டை எழுதி வாங்கினோம் என்றால் 2 கடனுறுதிச்சீட்டை நாராயணனின் தம்பி மருமகன் ஆனந்தனுக்கும் நாராயணனின் தாயாருக்கு ஒரு கடனுறுதிசீட்டும் பிரதிவாதி எழுதி கொடுத்துள்ளார்.

6. நான் தற்போது சொல்லும் விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. வாதியே நான்கு கடனுறுதிச்சீட்டையும் எழுதி தன்னிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி எனக்கு உறவினர் என்பதால் வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இருவருமே எனக்கு உறவினர்தான். நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. உண்மையானதுதான்.

(மறு விசாரணை இல்லை)

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.2/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரந்தாமன் | மதம் | : இந்து |
| த/பெ | : கிருஷ்ணன் | ஜாதி | : -- |
| வயது | : 58 | கிராமம் | : கே.ஜி. கண்டிகை |
| தொழில் : | உணவகம் | வட்டம் | : திருத்தணி |

**22.09.2025**
**வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் வந்தது. அந்த அழைப்பாணையை நான் எடுத்து வந்தேனா என்றால் முந்தைய வாய்தாவிற்கு வந்தது. அதை நான் இன்று எடுத்து வரவில்லை. எனக்கு வந்த அழைப்பாணையில் எங்குமே எதற்காக சாட்சி சொல்ல வேண்டும் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் இருந்தது. அவ்வாறு அழைப்பாணையில் எங்கு குறிப்பிடப்பட்டிருந்தது என்று சொல்ல முடியுமா என்றால் **(சாட்சியிடம் அழைப்பாணை நகல் காண்பிக்கப்பட்டது)** அழைப்பாணையில் வந்தது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் எதற்காக சாட்சி சொல்ல வேண்டும் என்ற விவரமே அழைப்பாணையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல. இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு நாராயணா தான் என்னை அழைத்து வந்தார் என்றால் போன திங்கட்கிழமை நீதிமன்றத்திற்கு நான் வந்திருந்த போது நீதிமன்றத்தில் வாய்தா விவரம் சொல்லி அதன் பேரில் எனக்கு வாய்தா விவரம் தெரியும்.

2. இந்த வழக்கில் எதற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்பது தெரியுமா என்றால் கடனுறுதிச்சீட்டை எழுதியதற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். கடனுறுதிச்சீட்டை எழுதும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் ராஜரத்தினம், நாராயணா, வெங்கடேசலு மற்றும் நான் இருந்தோம். மொத்தம் எத்தனை கடனுறுதிச்சீட்டு எழுதியுள்ளேன் என்றால் நான்கு கடனுறுதிச்சீட்டுகள் எழுதியுள்ளேன். அவை அனைத்தும் ஒரே நாளில் எழுதப்பட்டது என்றால் ஆமாம். கடனுறுதிசீட்டை யார் வாங்கி வந்தார் என்றால் வெங்கடேசலு வாங்கி வந்தார்.

கடனுறுதிச்சீட்டை எங்கு வைத்து எழுதினோம் என்றால் நாராயணன் வீட்டில் வைத்து எழுதினோம். என்ன தொகைக்கு கடனுறுதிச்சிட்டு எழுதப்பட்டது என்றால் ரூ.4,00,000க்கு பத்தாயிரம் ரூபாய் கம்மியாகும்.

3. அது என்ன தாள்கள் என்றால் அனைத்துமே ரூ.500/– தாள்கள்தான். அது எந்த வருடம் என்றால் 2019ம் வருடமாகும். தேதி மாதம் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. என் முன்பு பணத்தை நாராயணா வெங்கடேசலுக்கு நேரடியாக கொடுக்கவில்லை என்றால் நேரடியாகதான் கொடுத்தார். எதற்காக பணம் வாங்கினார் என்றால் என்னிடம் கடனுறுதிச்சீட்டு எழுத சொன்னார்கள். நான் எழுதினேன். நான்கு கடனுறுதிச்சீடுகளிலும் அனைவரும் எழுதியது கையெழுத்து போட்டது அனைத்தும் ஒரே பேனா என்றால் ஆமாம். எதற்காக கடன் வாங்கினார் என்பதில் என்ன எழுதினேன் என்றால் குடும்ப கஷ்டம் ஆகும். நான் உரிமம் பெற்ற ஆவண எழுத்தரா என்றால் இல்லை. நான் இதுவரை எத்தனை கடனுறுதிச்சீட்டு எழுதியுள்ளேன் என்றால் எழுதியதேயில்லை. நான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்லியுள்ளேனா என்றால் ஒரு முறை சொல்லியுள்ளேன்.

4. நான் சொல்வதுபோல் பிரதிவாதி வாதி நாராயணனிடம் பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும் அன்றைய தேதியில் கையெழுத்து மட்டும்தான் போட சொன்னார்கள் என்றாலும் பணம் கொடுத்துதான் கையெழுத்து வாங்கினார்கள். நான் நான்கு கடனுறுதிச்சீட்டுகள் எழுதியதாகவும் பணம் கொடுத்தாகவும் சொல்லியுள்ள விவரங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் கடனுறுதிச்சீட்டு ஒரு தேதி எழுதப்பட்டது என்றாலும் பணம் ஒரு தேதியில் கொடுக்கப்பட்டது என்றாலும் வெங்கடேசலு ஒரு தேதியில் கையெழுத்து செய்தார் என்றாலும் நாங்கள் வேறு ஒரு தேதியில் கையெழுத்து செய்தோம் என்றாலும் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எந்த கடனுறுதிச்சீட்டிலும் பிரதிவாதி கடனே பெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)

Typed to my dictation in open court and readover the witness and admitted by the witness as correct.

District Munsif, Tiruttani.